முற்பகல் 11-10

2. தகவல் கோரல்

தந்தை பெரியார் சிலை உடைக்கப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடம் தந்தை பெரியார் சிலை உடைப்பு குறித்து, அரசினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் ஒரு பிரச்சினையை எழுப்புவதற்கு நான் அனுமதி கேட்டிருந்தேன். அதுகுறித்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுகுறித்து பேசுவதற்கு நான் உங்களை அனுமதித்துவிட்டேன். தகவல் கோரல் என்ற முறையில் நான் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் கேள்வி கேளுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரிபுராவிலே புரட்சியாளர் லெனின் அவர்களுடைய சிலை இடித்துத் தள்ளப்பட்ட நேரத்தில், தமிழகத்திலே பெரியார் சிலை உடைக்கப்படும் என்று பா.ஜ.க.-வினுடைய தேசிய செயலாளர் ஒருவரே கூறி, அவை குறித்தெல்லாம் பத்திரிகைகளில், தொலைக்காட்சிகளில் பரவலாக செய்திகள் வந்தன. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரங்கள் எல்லாம் இந்த நாட்டிற்கே நன்றாகத் தெரியும். அவர் தேசிய செயலாளர்களில் ஒருவராக இருப்பவர் மட்டுமல்ல; இரயில் பயணிகள் வசதி மேம்பாட்டுக் கமிட்டியினுடைய தலைவராகவும் இருக்கக்கூடியவர்; திரு. எச். ராஜா அவர்கள். ஆக, அதைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கக்கூடிய போராட்டங்களினால் தமிழகமே தந்தை பெரியார் அவர்களுக்காக கொந்தளித்ததை நாடு கண்டது.

அதேபோல, கடந்த 6 ஆம் தேதி திருப்பத்தூரில் உள்ள பெரியார் சிலையும் உடைக்கப்பட்டிருக்கிறது. நேற்று முன்தினம் இரவிலே, புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கக்கூடிய அறந்தாங்கி தொகுதியில், விடுதி என்ற இடத்திலே இருக்கக்கூடிய பெரியார் சிலை உடைக்கப்பட்டிருக்கிறது. ஆக, பெரியார் சிலை உடைக்கப்படும் என்று கூறியவரை உடனடியாக இந்த அரசு கைது

2018 மார்ச் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

செய்திருக்க வேண்டும். அவர்மீது குண்டர் சட்டம் பாய வேண்டும்; அவரை குண்டர் சட்டத்திலே கைது செய்து, சிறையிலே அடைக்க வேண்டுமென்று இந்த அரசுக்கு ஒரு வேண்டுகோளாக, ஒரு கோரிக்கையைக்கூட நான் ஏற்கெனவே எடுத்து வைத்திருக்கிறேன். ஆக, அவரைக் கைது செய்யாத காரணத்தினால்தான், இன்றைக்குத் தமிழகத்திலே பெரியார் சிலையின்மீது கை வைக்கக்கூடிய தைரியம் பலருக்கு வந்திருக்கிறது. ஆகவே, உடனடியாக புதுக்கோட்டையில் இருந்த பெரியார் சிலையை உடைத்தவர்கள் கைது செய்யப்பட வேண்டும். இப்படிப்பட்ட இழிவான செயலை செய்வதற்கு தூண்டிவிட்டவர்களையும் கைது செய்ய வேண்டும்.

அதேபோல, ரத யாத்திரையை எதிர்த்து போராடியவர்களைக் கைது செய்திருக்கக்கூடிய இந்த அரசு, பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய வகையிலே நடந்து கொண்டிருக்கக்கூடியவர்கள்மீது கை வைக்க தயங்குவது ஏன் என்ற இந்தக் கேள்வியை மாத்திரம் இந்த அவையிலே எடுத்து வைத்து, இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன விளக்கம் தரப் போகிறார் என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுபதி, திரு. பெரியண்ணன் அரசு, திரு. மெய்யநாதன் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இப்போதுதான் திரு. பிரின்ஸ் அவர்கள் என்னிடத்திலே இதுசம்பந்தமான அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள்; உட்காருங்கள். திரு. பிரின்ஸ், திரு. காளிமுத்து மற்றும் திரு. கணேஷ் ஆகிய உறுப்பினர்களும் இணைந்து இந்தப் பிரச்சினையை எழுப்ப அனுமதி கேட்டிருக்கின்றார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவரைப் பேசுவதற்கு அனுமதித்துவிட்டேன். ஆகவே, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு பதிலளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதுதானே கொடுத்தார். அதில் என்ன? நான்தான் ஏற்றுக்கொண்டு அவர் பெயரைப் படித்துவிட்டேனே? (குறுக்கீடு) இருக்கட்டும்; விடுங்கள். நான் முதலமைச்சர் அவர்களை பதில் சொல்வதற்கு அழைத்துவிட்டேன்;

உட்காருங்கள். (குறுக்கீடு) பின்னர் பேசிக்கொள்ளலாம்; உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி காவல் நிலைய சரகம், புதுக்கோட்டை விடுதி என்ற கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி அருகில், சிமென்டினால் ஆன முழு உருவ பெரியார் சிலை ஒன்று திராவிடர் கழகத்தினரால் 25-4-2013 அன்று நிறுவப்பட்டது. கடந்த 19-3-2018 அன்று இரவு அடையாளம் தெரியாத நபர் ஒருவர் சிலையின் தலைப் பகுதியை சேதப்படுத்தியுள்ளார். இதுபற்றி தகவலறிந்த காவல் துறையினர், உடனடியாக கிராமத்திற்கு சென்று, கிராம மக்கள் உதவியுடன் சேதமடைந்த சிலையின் தலைப் பகுதியைச் சீரமைத்தனர். இச்சம்பவம் தொடர்பாக திராவிடர் கழக மண்டலத் தலைவர் திரு. ராவணன் என்பவர் அளித்த புகாரின்பேரில், ஆலங்குடி காவல் நிலையத்தில் பிரிவுகள் 295, 153(b) இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் உடன் இணைந்த பிரிவு 3, தமிழ்நாடு பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்துதல் சட்டப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் எதிரியை அடையாளம் கண்டுபிடித்து, உடனடியாக கைது செய்ய தனிப் படைகள் அமைத்து, தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம்பற்றி அறிந்த திருச்சி சரக காவல் துறைத் துணைத் தலைவர், புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் உடனடியாக சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று, கிராமத்தில் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறாவண்ணம் பார்த்துக்கொண்டனர்.

முற்பகல் 11-15

விசாரணையின்போது, சத்தீஸ்கர் மாநிலத்தில், மத்திய ரிசர்வ் காவல் படையில் ஹவில்தாராகப் பணிபுரியும் புதுக்கோட்டை விடுதி கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார் என்பவர் 15-3-2018 முதல் விடுப்பில் கிராமத்திற்கு வந்துள்ளார். மேற்படி செந்தில்குமார் சம்பவத்தன்று இரவு குடிபோதையில் அப்பகுதியில் நடமாடியுள்ளது அவ்விடத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. பதிவுகள் மூலமும், சாட்சிகளிடம் மேற்கொண்ட விசாரணையின் மூலமும் தெரியவந்துள்ளது. செந்தில்குமாரைப் பிடித்து

2018 மார்ச் 21] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

விசாரணை மேற்கொண்டபோது, அவர் பெரியார் சிலையை சேதப்படுத்தியதை ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், கடந்த 2013 ஆம் ஆண்டு பெரியார் சிலையை அவ்விடத்தில் நிறுவுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டபோது, தனது வீட்டின் அருகில் பெரியார் சிலையை நிறுவுவதற்கு அவர் எதிர்ப்பு தெரிவித்து, மீறி நிறுவினால் அச்சிலையை உடைத்துவிடுவேன் என்று மிரட்டியுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து செந்தில்குமார் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார். காவல் துறையினர் விரைந்து செயல்பட்டு, தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு, எதிரியை சம்பவம் நடந்த 12 மணி நேரத்திற்குள் கைது செய்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், 6-3-2018 அன்று இரவு, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் இருக்கும் தந்தை பெரியார் சிலையை விஷமிகள் சேதப்படுத்தினர். இதுபற்றி தகவல் அறிந்த காவல் துறையினர், அப்பகுதியில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நடவாமல் பார்த்துக்கொண்டனர். மேலும், இது தொடர்பாக திராவிடர் கழக நகரச் செயலாளர் திரு. இளங்கோவன் அளித்த புகாரின்பேரில் காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில், பா.ஜ.க. நகரச் செயலாளர் முத்துக்குமரன் மற்றும் பிரான்சிஸ் ஆகியோர் இச்சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்ததையடுத்து, அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்திற்குப் பயன்படுத்தப்பட்ட இரு சக்கர வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, சட்டத்தை மீறுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டு நிகழ்வுகளும் கண்டிக்கத்தக்கது; தலைவர்களுடைய சிலைகளைச் சேதப்படுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும், அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தாலும், குற்றம் கண்டறியப்பட்டால், அவர்கள்மீது அரசு பாரபட்சமின்றி கடும் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)